**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 30 | of | 2015 |

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 16-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா. -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **ராமலிங்கம்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-16.07.2025**

**வா.சா.-1**

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உடன் வந்து நிலத்தை அளந்த போது நான் அங்கு இருந்தேன். 5,6 பிரதிவாதிகள் சொத்தை சர்வேயர் அளந்தாரா என்று நான் பார்க்கவில்லை. 4, 5 பிரதிவாதிகள்தான் தகராறு செய்பவர்கள் என்றும், 1ம் பரிதிவாதி எந்த தகராறும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் நான் கட்டிடம் எழுப்பவில்லை, சுற்றுச்சுவர் மட்டும் எழுப்பினேன். 1ம்பிரதிவாதி அரசியல் மற்றும் பண பலம் இல்லாதவர் என்றும், அவரால் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. 14.06.2014 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.12 கொடுத்தேன்

என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கு மட்டுமே அனுப்பட்டது என்றால் சரியல்ல. அனைத்து பிரதிவாதிகளுக்கும் அனுப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 4,5,6 பிரதிவாதிகள் மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால்சரியல்ல. 4 முதல் 6 பிரதிவாதிகள் சொத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா என்று அளந்து பார்த்து அதன்பிறகு அவர்களிடம் இருந்து அதை மீட்க தாவா தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி வழக்கில் அவசியமில்லாத தரப்பினர் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் சொத்தை பரிக்க வேண்டி தவறாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 5,6 பிரதிவாதிகளிடம் இருந்து சொத்தை மீட்க முடியாமல் அனைத்து பிரதிவாகிதள் மீதும் அவசியம் இல்லாமல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி சொத்திற்கும் என்னுடைய சொத்திற்கும் இடையில் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைப்படி தாவா சொத்திற்கும் 1ம்பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 புகைப்படம் எப்போது எடுக்கப்பட்டது என்று ஞாபகமில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் 4 முதல் 6 பிரதிவாதிகள்தான் தகராறு செய்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே தாவா 1ம்பிரதிவாதியை பொறுத்து செலவுத் தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. மறுவிசாணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu
Date: 2025.07.17 10:04:57 +0530